மூன்றாவது வெளியீடு

விலை அணா நான் ௪.

# முல்லை

மூன்றாவது வெளியீடு

★

ஆதரவாளர்:

கவியரசர் பாரதிதாசன் அவர்கள்

59, பிராட்வே - சென்னை

விலை அணா நான்கு

# மூன்றாவது வெளியீடு

இந்த வெளியீட்டில் நம் கவியரசரின் புதிய கவிதை, நமது அருமைப் பாரதியாரின் 'மறுமலர்ச்சி', பேராசிரியரின் 'அவள் வேண்டுகோள்', பன்மொழிப்புலவர் அப்பாத்துரையாரின் 'இலக்கியப் பண்பு', நமது புலவர்மணி திருநாவுக்கரசரின் 'பூச்சூட்டல்', மறுமலர்ச்சி மதிப்புரையாளர் புது மைப்பித்தனின் 'இலக்கிய மரபு', மயிலேறு அவர் களின் 'நாடகக் கலை', இளம் புலவர் அறிவழகனின் 'பூக்காரி' இவை அத்தனையும் இடம்பெற்றுள்ளன. அனைத்தும் ஆழ்ந்து படித்து இன்புறத்தக்கன.

'வாழ்க்கையின் இலட்சியம்' அடுத்த வெளியீட்டில் வரும்.

அனைவர்க்கும் நன்றி!—வணக்கம்.

ப. முத்தையா

தொகுப்பாளர்

# அவள் இல்லை

'பழகுதற்குத் தோழருள்ளார்; கிளைஞர் உள்ளார்;
பல்பொருளும் இல்லத்தில் நிறையக் கொண்டாய்;
விழியினிலே ஒளியிழந்த தென்ன' என்று
விளம்பினை நீ உளம்ஒத்த தோழா கேளாய்
எழுதுகின்றேன் ஓடவில்லை இறகு! கண்கள்
எதிலேயும் பொருந்தவில்லை என் அகத்தை
அழகுசெய்து நாளும்என்பால் அன்பு செய்வாள்
அவள் இல்லை; என்நெஞ்சில் அமைதி இல்லை!

'புகழ்வந்து மலைமலையாய்க் குவிய, வாய்த்த
புதையலைப்போல் வருவாயும் கொட்ட, நீயேன்
இகழ்அடைந்த தமிழரசு போல நெஞ்சம்
இளைக்கின்றாய்' என்கின்றாய் தோழா கேளாய்
பகற்பணியும் காயவில்லை. இரவில் தூக்கம்
பகையாகும்! என்உளமாம் கருங்கல் மேட்டை
அகழ்ந்ததிலே இன்பமென நிறைந் திருந்த
அவள்இல்லை; என்நெஞ்சில் அமைதி இல்லை!

'அடுக்களையில் எழும்புகையே அமுதாய் நாற
அண்டையிலே பணிசெய்வோர் உன்வாய் பார்த்து
நடுக்கமுறும் நிலையுடையாய் நலிவேன்' என்று
நவிலுகின்றாய் தோழனே புகலு கின்றேன்
கடைக்கேகக் காலினிலே ஓட்ட மில்லை
கண்ணுக்குள் மூடிவைத்துக் காத் திருந்த
அடிச்சிலம்பின் இசையாளைத் தாய் அழைத்தாள்
அவள் இல்லை; என்நெஞ்சில் அமைதி இல்லை!

‘தென்றல்வரும் வழியினிலே அமைந்த வீடும்
செந்நெலினைக் குவிக்கின்ற நன்செய் தானும்
என்றைக்கும் உடையாய்நீ என்ன ஏக்கம்’
என்றுரைத்தாய் நன்றுரைப்பேன் கேளாய் தோழா
ஒன்றிலுமே பொருந்தவில்லை என்றன் காதும்
உயிர்போன்ற மங்கையினை அண்டை வந்தே
அழைத்துச் சென்றாள்என் அருகில், வீட்டில்
அவள் இல்லை; என் நெஞ்சில் அமைதி இல்லை!

‘புருவம்நெறித் தால்உலகம் பொடியாய்ப் போகும்
போஎன்றால் செங்கதிரும் போக்கில் மாறும்
பெருமறவா ஏன் நலிந்தாய்’ எனக்கேட் கின்றாய்
பெறற்கரிய தோழனே இதைக்கேட் பாய்நீ
ஒருநினைவும் ஒருசெயலும் இலா தொழிந்தேன்
உயிர்வாழ்கின் றேன்இதுவும் புதுமையே ஆம்!
அருந்துறையை அன்னைவந்து கூட்டிச் சென்றாள்!
அவள் இல்லை; என்நெஞ்சில் அமைதி இல்லை!

—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

★

# தமிழ் மறுமலர்ச்சி

சுமார் ஐந்நூறாண்டுகளுக்கு முன், மேனாட்டில் நெடிய இடை இருளில் வளர்ந்து அடர்ந்த மடமைக் களைகளால் மாந்தர் உணர்வுப் பயிர் மடங்கி அழியும் நிலையிலிருந்தது. அந் நீண்ட இருள் நீங்கித் தெருட்சி பிறக்க எழுந்த அறிவுச் சுடரை அந் நாட்டார் தங் கலையின் "மறு பிறப்பு" (Renaisance) எனப் பெயரிட்டார். அப்பெயர் அவர்கள் கலையுலகத்தை அறவே மறந்தபின் புதிதாய்த் தோன்றிய ஒரு நிலையைக் காட்டும். புதியதெல்லாம் நல்லதென்று கூறுதல் பொருந்தாது; நன்மைதருந் தொன்மைகளைத் தொலைப்பதுவும் அறிவாக்க நெறி ஆகாது. அன்றியும் பழமையொடு தொடர்பற்ற முழுப்புதுமை, பழ விழுப்பம், குடியுரிமை, அறிவு நெறி, கலை இயல்பு, அறிவுணர்ச்சி அனைத்தினையும் வேரறுத்து அறியாத புது வாழ்வில் ஆழ்த்திவிடும். அதனியல்பு நாளடைவில் நம்மைப் பிணித்துத் தன் வயமாய்த் திருப்பிவிடும்.

உலகியலில் பழையன வெல்லாம் தீதாகமாட்டா; அதுவேபோல் புதியன வெல்லாம் நன்றும் ஆக மாட்டா. தொன்மையில் நாமறிந்த நன்மைகளை அடிப்படுத்தி, நடுவு நிலையறிவால் நாளும் நல்ல புது முறைகளை ஆராய்ந்தெடுத்துத் துறைதோறும் தொடுத்து வாழ்வை வளப்படுத்த முயல்வது நம் கடனாகும். அம் முறையில், தீதகற்றி நன்றாகும் பழமையின்மேல் அடிகோலி, நல்ல புது அணி மலரவும், நாக

ரிக வாழ்வு உயரவும் நாடுவதே அறிவறமும் அறநெறியும் ஆகும். இதில் ஐயமில்லை.

சென்ற சில நூற்றாண்டுகளாய் மட்டற்ற கெட்டுறக்கமாகிய மயக்கத்தினால் நாம் நமக்குரிய மாண்புகளையும் மரபுகளையும் அறவே மறந்து, பிற மதங்களிலும் வழக்கங்களிலும் அலைப்புண்டு தாழ்ந்து வாழ்ந்து வருகிறோம். இந்நிலையினின்று நாம் இன்று விழித்தெழுந்து தமிழ்க்குரிய கலை தழையும்படி நம் வாழ்வைப் புதுக்க முயல்கிறோம். இம்முயற்சியின் பயனாய் ஏற்பட்ட இயக்கத்தையே "மறுமலர்ச்சி" என வழங்குகிறோம்.

மறுபிறப்பில் கலை இயல்பு இறந்ததினும் புதிதாகப் பிறந்த நிலை சிறந்திடலாம்; அன்றி மிக இழிந்தநிலை எய்துவதும் கூடுமன்றே. புதிய நிலை எதுவாயினும், பின்னது முன்னதின் வேறுதல் ஒருதலை. தன்மையில் இரண்டும் ஒன்றெனல் தவறாகும். இவற்றிடை விடாத் தொடர்பின்மையால், பின்னிலை முன்னதன் விளைவுளாகாது.

மறுமலர்ச்சியில், மலர்தரு மரத்தியல் மாறாது. என்றும் நின்றுவளரும் தருவில் பருவந்தோறும் புதுமலர் தோன்றும். பூப் புதிது எனினும், பூக்கும் தருவியல் வேறன்று; பருவமலர் தருவது அதன் இயல்பு. பூத்த மலர் பிஞ்சாகிக், காயாகிக் கனி பழமாய், இனம் பெருக்கும் விதை ஈனல் அதன் நிலைத்த பயனாகும்.

இனி, ஒருமுறை பூத்தபின், உரனழிந்து இறந்தொழியும் செடியுமுண்டு. அதன் விதையாலெழும் பூண்டு,

தாய்ச்செடியின் வேருய் இனம் வளர்க்கும் விதை யாகும். இவ்வகுப்பின் புது விதைகள், இன வகை யில் மறுபிறப்பும், தன்மையினில் தாய்ச் செடியின் வேருன தனியியல்பும் உடையனவாம்.

மேனுட்டுப் புத்தறிவுக் கலைத்தோற்றம், மறு பிறப்பு வகையாகும். கிரேக்க மொழி வாழ்விழந்து, ..துதில் வளர்ந்த அறிவுமலர்க் கலைகளனைத்தும் மாண்ட(ன). அதன்பிறகு மனவுலகில் மறைந் துறைந்த அதன் விதையைக் கண்டெடுத்த நல்லறிஞர், தம் உணர்வு மழை ஈரத்தில் மேற்புலத்து விதைக்கலானுர். அதனுல் பகுத்தறிவின் முளை கிளைத்துத் தளிர்த்த கலைவாழ்வின் புதுப்பிறப்பை அந்நாட்டார் அடையலானுர். ஆனு லும், அது பண்டைக் கிரேக்கர் கொண்ட வகை யன்று; முழுதும் அதன் பழ தீர்மை மேனுட்டுப் புதுக்கலைகள் அடையவில்லை. இனவகையில் பழ நிலையைப் புத்தறிவும் ஓரளவில் ஒத்தாலும், இடை யடர்ந்த மடக்கனைகள் ஊழ்த்து அவற்றின் இயலூறி வலுத்த புலத்து உதித்த புதுக்கலைமுளைகள் ஆழ்ந்தழு கும் பழங்களையின் இயல்கலந்து ஒரு புதுவகையாய் வளரக் காண்போம்.

வாழ்விழந்த கிரேக்க ஆரிய எபிரேயம் போலாது; "என்றுமுள தென் தமிழ்" தன்மக்கள் உணர்வு மழை, உரனெளியின் குறைவாலே, மயங்கி வாடிச் சாம்பிற் றல்லால் உயிரிழந்து சாகவில்லை. ஆதலினுல், தற்காலப் புதுவுணர்வின் துளியாலும், புத்தறிவின் ஒளியாலும் மாயாத தமிழ் தளிர்த்து மீண்டும் மலர் அரும்புகிறது. அதனுலேயே, நாமதனைப் புதிய பிறப்

பென்னுமல், மறுமலர்ச்சி எனப் பொருந்தப் பேசுகி ரேம். இம் மறுமலர்கள் நறுமணமுற்று எழில் ஒளி ரச் செய முயல்வோர் இவ்வுண்மை மறவாமல் கருத வேண்டும்.

தூரொடு கற்பகத் தமிழ்த்தரு வழித்துப் பிறகலைப் பரல்களை வித்துவோரும், அதன் ஆணி வேரறுத்து இனஞ் சேராப் பிறகலை வித்துக்களை ஒட்டுவோரும், தமிழ் மண மறுமலர் கமழ்நலை விழைவோரல்லர். வேரொடு தூறும் தமிழாய்த் தழைய தம்முரனுரமிட்டு உணர்வு நீர் பாய்ச்சி வளர்க்கப் பூக்கும் மறுமலர்க ளில் மட்டும் தமிழின் புது மணமும் அதியழகும், மதுரமிகு கனி வகையும் கொள்ளக் கூடும்.

இனி, தமிழ் மறுமலர்ச்சி வளம்பட வளர்க்கும் வழி சிலவற்றையும் ஆராய்வோம். நிலைப்பொருள் எதற் கும் நிலம், நீர், உரம் இவை மூன்றும் தேவை. தருக் களின் வளமை (இயல்பு), தழை—மலர்—பழத்தியல் இம்மூன்றன் வளத்தைப் பொருத்ததாம். தமிழ்த் தருவும் அதை வளர்ப்போர் ஆர்வம்—உணர்வு-உரன் எனு மூன்றின் வளத்தொடு தூய்மையால் வளர்ச்சி யும், அவற்றின் குறைவால் தளர்ச்சியும் வாய்க்கப் பெறும். தமிழரின் குன்றாத ஆர்வத்தால் அவர் கலை, மொழி நின்று நிலவும்; உணர்வின் பெருக்கால் ஓங்கி வளரும்; உரன் தரும் ஒளியால் நறுமலரும் தீங்கனி யும் நனி நல்கும். தமிழ் மறுமலர்ச்சிக்கு இம்மூன்றும் இன்றியமையாதவை. இவற்றில் ஒன்று குன்றினும் நன்றாகாது. குன்றா உள்ளமும், குறையா உணர்வும், பொன்றா உரனும் என்றும் வேண்டும்.

இன்னும், யாண்டும் எஞ்ஞான்றும் துறைதோறும் பொய் கொன்று மெய்பேணல் தமிழ் மறுமலர்ச்சிக்கு மிகவும் வேண்டும். பொய் வளி நீண்டில் தமிழில் கலையும் புலனும் எய்த்து மடியும். பொய் வகையுள் தெய்வப் பெயரால் வைகி வருபவை அளவிறந்தன; அறக் கழிவுடையன. அதனால் அவற்றை இரக்கமின்றி அகற்றுதல் அறனாம். வழுவும் பொய்யும் தழுவா வாய்மையை வளர்ப்பது தமிழர் முதற் கடன்.

பிற கலை மொழிகளைத் தமிழ்ப் பகையென்று தள்ளுதல் வேண்டா. அவற்றைச் சீரணவுணவாக வேண்டு மளவு கொள்ளுதல் அறிவறமாகும். புல்லுருவிபோல் அவை ஒட்டி வளருமேல், உய்யும் தமிழ்க்கலை நையு மென்பதில் ஐயமில்லை.

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

---

ஆடை, அணிகலன், ஆசைக்கு வாசமலர் தேடுவதும், ஆடவர்க்குச் சேவித்திருப்பதுவும், அஞ்சுவதும், நாணுவதும் ஆமையைப்போல் கெஞ்சுவதும் ஆகக் கிடக்கும் மகளிர் குலம், மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஒருபகுதி.

—புரட்சிக்கவிஞர்

# இலக்கியப்பண்பு

இலக்கியம் என்பது உண்மையில் என்றும் மாறாத விழுமிய பயனுடைய நூல்களின் தொகுதியை மட்டுமே குறிக்கும். ஆயினும் விரிந்துபட்ட வழக்காற்றில் அது எல்லாவகை நூல்களின் தொகுதியையும் குறிக்கிறது. இலக்கியம் என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லும் (Literature) இதுபோலவே இருவகையில் வழங்குகிறது. இவ்விரு வேறுவகைகளையும் பிரித்துணரவே பிரஞ்சு நாட்டறிஞர் உயர் இலக்கியத்தை நல் இலக்கியம் (Belles Lettres) என்று தனிப்படக் குறிக்கின்றனர்.

'நல் இலக்கியம்' என்பது அன்றன்று மட்டும் பயன்படுபவையான எழுத்துப் போக்குவரத்து, கணக்கு, அரிச்சுவடி, எண்சுவடி, பள்ளிப் புத்தகங்கள், செய்தித் தாள்கள் ஆகியவற்றை உட்படுத்தாது. அது மட்டுமன்று. கணக்கு, அறிவியல், கலையியல் முதலிய நூல்களும் இலக்கண நூல்களும்கூட நல் இலக்கியத்துக்குப் புறம்பானவை என்பது பலருக்கு வியப்பாயிருக்கக் கூடும். ஏனெனில் அவற்றுள் பல என்றும் பயனுடையவை. ஆயினும் அவை அறிவு ஒன்றுக்கே உணவு தருபவை. ஆதலால் அறிவு வேறுபடும் இடங்களில் அவை பயன் தரமாட்டா; அறிவு வளர்ச்சி யடைந்தபின் பழமை பட்டுப்போகும். மொழிக்கு மொழி அவற்றை மொழிபெயர்க்கவும் கூடும். நல் இலக்கியமோ எத்தனை அறிவு வேறுபாட்டினிடையிலும் ஒளிபெறும். எத்தனை அறிவு வளர்ச்சி

யடைந்தபோதும் சுவை குன்ருது. மொழிக்கு மொழி தூண்டுதலாயிருந்து புது உருவம் பெறுமேயன்றி மொழிபெயர்க்கப் படமாட்டாது.

இலக்கியத்தின் இம்மாருப் புதுமைக்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று அது அறிவுக்கு மட்டும் உணவாயிராமல் உணர்வுக்கும், அழகார்வத்துக்கும் உணவாகின்றது என்பது. பல பொருட்கும் ஒளியேற்றியும் குறைவுபடாத ஒளிபோன்றது அது. இன்ஞெரு காரணம், அது மனிதவாழ்க்கையுடனும் அதனுடன் இரண்டறக் கலந்து நிற்கும் மொழியுடனும் பிணந்து நிற்பது. அறிவியல் நூல்களும் மொழிபெயர்ப்புகளும் அறிவுத் திறத்தில் நின்று மொழியிலுள்ள சொற்களின் அகராதிப் பொருளே மட்டுமே அறிந்து வழங்க வல்லவை. இலக்கியமோ சொற்களுக்கு அகர வரிசைகளில் காணமுடியாதவையான மரபுகள், குறிப்புப் பொருள்கள், (தொனி அர்த்தங்கள்) தூண்டுதல் பொருள்கள் (Associations) உணர்ச்சி அலே எழுச்சிகள், ஓசை நயங்கள் ஆகியவற்றையும் பயன்படுத்துவது. மனித வாழ்க்கையின் இன்ப துன்பங்கள், ஆழ்ந்தகன்று மறைந்தியங்கும் அவாக்கள், அறிவுக்கும் உணர்வுக்கும் எட்டா உள்ளுறை உணர்வுகள் ஆகியவற்றை இலக்கியக்கலேஞனைப்போல் வேறு எவரும்—வேறு எக்கலேஞரும் கூடக் கையாள முடியாதென்பது திண்ணம்.

இதனுல்தான், ஒரு நாட்டுக்கு இலக்கியத்தைப் போல் அழியாப் பெருமை தருவது வேறு எதுவுமில்லே என்று கருதப்படுகிறது. இறந்துபோன கிரேக்க, ஐஸ்லாந்து நாகரிகங்கள் இன்று அவற்றின் இலக்கியத்தால் மட்டும் உலகத்தினர் நினைவில் இடம் பெற்

றுள்ளன. உண்மையில் மாசு மறுவற்ற இலக்கிய உயர்வு ஒரு நாட்டை அழியா நாடாக்கும் என்பதில் ஐயமில்லை. அப்படியானால் கிரேக்க முதலிய நாகரிகங்கள் அழிந்துபட்டது எதனால் என்று கேட்கலாம். இதற்கு இரண்டே காரணங்கள் கூறத்தகும். ஒன்று அவற்றில் கலந்திருந்த மாசு. இன்னொன்று இதனினும் அடிப்படையான ஒரு காரணம். கிரேக்க நாகரிகமும் இறந்துபட்டபிற நாகரிகங்களும் தாமாகத் தம் நிலத்தில் வளர்ந்தவை அல்ல. பிற நாகரிகங்களினின்று கிளைத்து வளர்ந்தன. உள்ளூர வேரற்ற அவ்வொட்டுவளர்ச்சி ஒட்டிய பண்பின் உறுதி குலைந்தவுடன் குலைவுற்றது.

தமிழ் மொழியும் இலக்கியமும் பல வகையில் வெளியிலிருந்து ஏற்பட்ட தாக்குதல்களினால் சீரழிவுற்றும் உள்ளூர உயிர்ப் பண்பு உடையதாயிருப்பதனால் மட்டுமே அழிவுக்கிடம்தராமல் உயிர்ப்பு உரங்கொண்டு போராடவல்லதாயிருக்கிறது. தமிழிலக்கியம் தமிழ் மொழியின் மலர்ச்சி; தமிழ் மொழி தமிழ் வாழ்வு தமிழ்ப்பண்பு ஆகியவற்றின் மலர்ச்சி; தமிழ் வாழ்வும் பண்பும் தமிழர் வாழ்வின் மலர்ச்சி. தமிழர் வாழுமளவும் அவை வாழும். தமிழ் மொழியும் இலக்கியமும் மீண்டும் தளிர்த்தோங்கும்; வளங்கெடாது.

உண்மைத் தமிழ்ப் புத்திலக்கியம் ஏற்படவேண்டின்—உண்மைத் தமிழ்க் கலைநூல்களும் அறிவியல் நூல்களும் (மொழி பெயர்ப்பின்றித் தமிழ்மொழியிலேயே) எழவேண்டுமானால், தமிழ்ப் பண்பும் மரபும் பிழையாத உயிருடைய இலக்கிய உணர்வு எழவேண்டும்.

—கா. அப்பாத்துரைப் பிள்ளை

# கவிஞர் வாழ்க்கையில்!

நம் கவிஞர் பொழுது போக்குக்காக மாலை வேளையில் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து அமைதி காண்பது வழக்கம்.

அப்போது சிறுவர்கள் 'காற்றாடி' விட்டு விளையாடுவார்கள். இதை உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தார் நம் கவிஞர்!

ஒரு பையனின் 'காற்றாடி'க்கு வால் போதவில்லை. உடனே அந்தப்பையன் தன் கோவணத்தைக் கிழித்து அந்தக் காற்றாடிக்கு வால் கட்டிப் பறக்கவிட்டான். காற்றாடி உயரப் பறந்துகொண்டிருக்கையில் பக்கத்தில் இருந்த கோவில் கோபுரத்தின் தங்கக் கலசத்தின் மேல் அந்தக் கோவணம் சுற்றிக் கொண்டது. உடனே, அந்தச் சிறுவன் பக்கத்திலுள்ள தன் தோழர்களிடம் "என் கோவணம் தங்கக் கலசத்தின் மேல்" என்று கூறிப் பெருமையடைந்தான். இதற்கு ஒரு உவமை கூறுகிறார் நம் கவிஞர்.

இது எதற்குத் தெரியுமா?

"சொந்தமான நூல்கள் எதுவும் எழுத வகையறியாத சிலர் வேண்டாதவற்றை மொழிபெயர்த்தும்—பழந்தமிழ் நூல்களான தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற பெரிய நூல்களில் "பதிப்பாசிரியர்" என்ற "முத்திரை" போட்டுவருகிறார்களல்லவா? அதற்குத்தான் "என் கோவணம் தங்கக் கலசத்தின் மேல்!" என்று கூறுகிறார்" நம் கவிஞர்.

எப்படி உவமை?

உவமையிலும் சிறந்த கருத்தை உணர்கிறோம்!

—முத்து

# அவள் வேண்டுகோள்

இல்வாழ்க்கை என்றால் கணவனும் மனைவியும் வாழ்ந்து வயிறு வளர்த்தல் மட்டும் அன்று. வயிற்றுப் போராட்டமே மக்களினத்தை அலைத்துவரும் இந் நாளில் இல்வாழ்க்கை இவ்வளவுதான் என்று தோன்றுகின்றது. ஆனால், பண்டைத் தமிழ்நாட்டில் வயிற்றுப் போராட்டம் இவ்வளவு கொடுமையாக இல்லாத நாளில் இல்வாழ்க்கையின் நோக்கம் சிறந்த தாக இருந்தது. பிறர்க்கு உதவியாக வாழ்ந்து குடும் பம் நடத்துவதே இல்வாழ்க்கையாகப் பழந்தமிழர் எண்ணினர், ஆகையால் இந்த நோக்கம் அறிந்த குடும்பத் தலைவர் பொருள்தேடிக் குவித்து விருந் தினரை ஓம்புவதைக் கடமையாகக் கொண்டனர்,

> " இருந்தோம்பி இல்வாழ்வ(து) எல்லாம்
> விருந்தோம்பி
> வேளாண்மை செய்தற் பொருட்டு "

எனத் திருவள்ளுவர் இந்தக் கடமையை தெளிவு படுத்தி யுள்ளார்.

இவ்வாறு விருந்தோம்பும் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய பொருள் ஒரு குடும்பத்தில் குறைந்து விட்டது. ஆகையால், பொருள் தேட வேண்டும் என்று துணிந்தான் குடும்பத் தலைவன். அக்காலத் தில், பொருள்தேட முனைந்தவர், தமிழ் நாட்டைவிட்டு வடநாட்டுக்குச் சென்று வாணிகம் முதலியன நடத் திப் பொருள் திரட்டிய பிறகு தம் ஊருக்குத் திரும்பி

வருவது வழக்கம். செல்வம் வேண்டுமானல் கடல் கடந்து சென்றும் சேர்க்கவேண்டும் என்ற கருத்து 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற பழமொழியாக ஏற்பட்டது இந்த வழக்கத்தால்தான்.

இந்தக் குடும்பத் தலைவன் கடல்கடந்துபோக எண்ணவில்லை. மலை கடந்து பாலைவனத்தின் வழியாகப் போகத் துணிந்தான். அந்தக் கொடிய வழியில் உள்ள இடர் எல்லாம் அவனுக்குத் தெரிந்தனவே. அந்த வழியில் தான் மட்டுமே செல்லத் துணிந்தான். மெல்லியளாகிய தன் மனைவியை அந்தக் கொடிய வழியில் அழைத்துப்போக அவனுக்கு மனமில்லை; அதைப் பற்றி எண்ணவும் அஞ்சினன். எப்படியாவது அவள் தன்னுடன் வராமல் தடுக்கவேண்டும் என்று முயன்முன். அவளிடம் சென்று அந்தப் பாலைவழியின் கொடுமையை எடுத்துரைத்தான்.

"அந்தக் கொடிய வழியில் மறவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்குக் கொலை என்பது ஒரு விளையாட்டு, கொலைக்கு அஞ்சாத அவர்கள், வழிப்போக்கருக்கு என்ன துன்பமும் செய்வார்கள். அவர்கள் மனம் போலவே, அந்த நிலமும் வறண்டு தீய்ந்து போயிருக்கின்றது. அவர்கள் நெஞ்சில் ஈரமில்லாதது போலவே, அந்த நிலத்தில் நீரும் இல்லை. மழையில்லாமையே காரணம். மழையில்லாமையால் மான்களுக்கும் உணவு அற்றுப் போய்விட்டது. அந்த மான்கள் வேறொன்றும் கிடைக்காமையால், மரல் பழத்தைத் தின்று உயிருடன் இருக்கின்றன. அந்த அளவிலாவது உயிர் தாங்க மக்களுக்கு இடமுண்டா

என்ருல் அதுதான் இல்லை. அவர்கள் ஆறலைகள்வரின் அம்புக்கு இலக்காக வேண்டியுள்ளது. மரண வேதனைபட்டு வாடும் நிலையிலும் புலர்ந்து வறண்ட நாவிற்கு நீர் கிடைப்பதில்லை. தண்ணீர் பெருமல் தடு மாறும் துயரம் பொறுத்தற்கு அரியது! அந்தத் துயரத்தை ஒருவாறு போக்குவது ஒன்று உண்டென் ருல், அதுதான் துன்பத்தால் விடும் கண்ணீர்! அந்தக் கண்ணீரே வறட்சியான நாவை நனைக்கும். இத்த கைய காட்டு வழியில் உன்னைப் போன்ற மெல்லியல் வரலாகாது''

மறையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங்(கு) அருஞ்சுரத்(து) ஆரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெருஅத் தடுமாற்(று) அருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் காடு—

என்ருன்.

இதைக் கேட்ட தலைவி வாழ்வின் உரிமையும் கடமை யும் நன்கு உணர்ந்தவள்? இன்பம் துன்பம் என்ப வற்றின் உண்மை இயல்புகளைத் தெளிய அறிந்தவள்; புறத்தே உள்ள பொருள்களைவிட அகத்தே உணரும் உணர்வு நிலைகளே இன்பதுன்பங்களுக்கும் காரணம் என்பதை விளங்கக் கண்டவள். அந்தப் பாலை வழி யும், அதன் வறண்ட நிலையும், வழிப்போக்கர்படும் அல்லலும் அவளுக்குத் துன்பமாகத் தோன்றவில்லை. கணவனைக் கொடிய வழியில் அனுப்பிவிட்டுத் தான் மட்டும் இனிய வீட்டிலிருந்து வாழும் வாழ்வே அவ ளுக்குத் துன்பமாகத் தெரிந்தது.

"அன்ப! என் மன நிலை அறியாமல் என்னென்னவோ சொன்னீர்! பல்லாண்டு என்னோடு பழகியும் நீர் இவ்வாறு கூறுவது தகுமோ? வாழ்க்கையில் எது நீங்கினும் நீங்குக. எனக்கும் உமக்கும் இடையே உள்ள அன்பு மட்டும் நீங்குதலாகாது. அந்த அன்பு கெடுமாறு சூழவேண்டா. அந்தப் பாலை வழியில் நேரும் துன்பத்திற்கு யான் துணையாக வரல்வேண்டும்; அதுவே யான் விரும்பும் இன்பம்," என்று தன் கணவனிடம் கூறினாள்.

என்நீர் அறியாதீர் போல இவைகூறல்
நின்நீர அல்ல நெடுந்தகாய்! எம்மையும்
அன்பறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பம் துணையாக நாடின் அது அல்லது
இன்பமும் உண்டோ எமக்கு

(கலித்தொகை 6)

இந்த வேண்டுகோள் அவன் முயற்சிக்கு முட்டுக்கட்டை யானது.

—பேராசிரியர் மு. வரதராசனார்

---

மக்கள் புதுவாழ்வு வாழவேண்டுமானால் நாடு முழுவதும்—வீடுகள் தோறும்—தெருக்கள் தோறும் நூல் நிலையங்கள் அமைக்கப்படவேண்டும்.

—புரட்சிக்கவிஞர்

# பூச்சூட்டல்

நீலவானம். அதை நிமிர்ந்து முத்தமிட நினைக்கும் மலைத்தொடர்கள். கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே பசுமை. அதன் அருகே கான்யாறு ஓடுகிறது. அம் மலைச்சாரலை அடுத்து எளிமைக்கு எடுத்துக்காட்டாய், பூஞ்சோலையைத் தனக்கு அரணாய்க்கொண்ட ஒரு சிறுகுடில். அக்குடிலில் பண்பட்ட உள்ளத்தினராகிய முனிவர் ஒருவர் தம்மொருமகளுடன் வாழ்கிறார். அமைதி விரும்பும் அவருள்ளத்திற்கு அவர் வாழ்விடமும், சூழலும் உதவியாயின. காற்றையும் நீரையும் பருகி, கனியையும் கிழங்கையும் உண்டு உள்ளும் புறமும் ஒளிபெற்ற சான்றோரிவர்.

இம்முனிவர்க்கு ஒரேமகள். அவள் ஆடவரில் தன் தந்தையையும், பெண்டிர்களில் தன் தாயையுமன்றிப் பிறரை அறியாதவள். 'அம்மா, விரிசிகை' என்று தந்தை எழுப்ப மலர் பொழுதில் எழுந்து, சுனை நீராடி, குறிஞ்சிமலர் சூடி, கனியும் கிழங்கும் உண்டு வளர்ந்த சிறுபெண் விரிசிகை. அன்றலர்ந்த மலர். இளமை கொழிக்கும் பருவம். தந்தையையன்றி ஆடவனொருவனை அறியாத உள்ளம்.

கிளியொடு பேசுவாள்; மயிலொடு ஆடி மானைத் தொடர்வாள்; சோர்வு நீங்கச் சுனை ஆடுவாள்; அசோக மரத்தில் கட்டிய ஊஞ்சலிலிருந்து மலைவளம் பாடுவாள். இதுவே அவளுக்குப் பொழுது போக்காய் இன்பமான விளையாட்டாய் அமைந்தது.

தந்தையும் மகளும் வாழ்ந்த தனிஇடத்தில் இப்பொழுது ஆடவரும் மகளிருமாய்ப் பலர் நடமாடுகின்றனர். என்ன காரணமோ? ஆம். வேந்தர் உதயணர் அரசி வாசவதத்தையோடு இங்கு வந்துள்ளார். தம் கண்ணினும் இனிய நண்பன் யூகியைப் பிறந்த துன்பத்தை மறக்க அவர் உள்ளத்தில் இன்பம் சேர்க்க அமைச்சர் செய்த முயற்சி இது.

உதயணனும் வாசவதத்தையும் சுனையில் நீராடினாற் போன்ற தண்மையும் இன்பமும் அச்சோலையுட் புகுந்தபோது பெற்றனர். அவர்கள் பின்னே வருகிறாள் காஞ்சனை. இவள்தான் வாசவதத்தையின் உயிர்த் தோழி. இருவரும் குன்றின் பாங்கர் அமர்ந்தனர். சில பேசினர். அப்பொழுது காஞ்சனை வாசவதத்தையோடு ஏதோ கண்ணாற்பேசினாள். வாசவதத்தை மலைவளம் காண விரும்புவதாக உதயணனிடம் விடை பெற்றது அதன் விளைவுபோலும். அவர்கள் பிரிகின்றனர். யூகியைப்பற்றி நினைவோட வேந்தர் உதயணர் சிலையாய் அசையாதிருக்கிறார். அவ்வழியே வந்த விரிசிகை இதைக் காணுகிறாள். அவர் வடிவம் அவள் உள்ளத்தில் இன்ப உருக்கொண்டது.

'இவர்யார்? தந்தை பிறந்த இனத்தில் ஆ! இப்படியும்.... அழகுண்டோ? இவரோடு நான்....எப்படி.... பேச்சுத் தொடங்கலாம்....' இது விரிசிகையின் உள்ளம். எங்கோ அவள் உள்ளத்தின் ஆழத்திலிருந்த பருவ எண்ணம் அரும்பின்றது. 'இதோ'.... என்று மெல்ல அடிமேல் அடிவைத்து அதைவிட்டுச் செல்லுகிறாள். குறிஞ்சி, முல்லை, குருக்கத்தி, நாகம், நந்தியா

வர்த்தம் முதலிய மலர்களைப் பறித்துக்கொண்டு உத யணனிடம் வருகிருள். பேதை விரிசிகை பேசுதற்குக் காரணம் கண்டுவிட்டாள். 'ஐய, இந்த மலர்களைப் பிணையல்களாகத் தொடுத்துத் தந்தால் யானும் என் பாவையும் அணிந்துகொள்வோம்.' என்று மலர்களை நீட்டினுள்.

விரிசிகையின் பேரழகும், தேன்மொழியும் 'வன மகளோ' என்று எண்ணச் செய்தன. உள்ளம் தெளிந்து முனிவர் மகள் என்று உறுதி செய்தான் உதயணன். 'ஓ' அழகான மலர்! என்று தன் மேலாடையை விரித்து வாங்குதற்கு நீட்டினுன். விரி சிகை அந்த நீலநிற ஆடையில் வண்ணமலர்களைச் சொரிந்தாள்.

மாலை தொடுப்பதில் மன்னன்—மன்னன்தான்! எந்த மலரை எதை அடுத்துவைத்தால் வனப்பாகுமோ அதை அறிந்து மாலை தொடுத்தான். மலராய்ந்து தொடுத்தான். அவளுக்கென்றும் அவள் பாவைக் கென்றும் சொல்லிக்கொடுத்தான். பெற்ற விரிசிகை தன் கூந்தலில் அணிந்துகொள்ள அறியாளாய் வருந்தி நின்ருள். அவள் கள்ளமற்ற உள்ளத்தை உதயணன் நொடிப்பொழுதில் அறிந்தான். 'இங்கேவா' என்று அழைத்தான். அருகே இருக்க நீலநாகம் படம் விரித்தாற்போல, அவள் கூந்தலில் ஒப்பனை செய்தான். அதற்கேற்ப அவள் காதணியை செம்மைப்படுத்தி ஞன். 'மெல்லச் செல்க' என்று விடுத்தான். இவை யனைத்தும் விரிசிகை உள்ளத்தில் இன்பம் தேக்கின. 'என்ன அழகான மாலை தொடுத்தான்! அதைவிட

என்ன அழகாகச் சூட்டினுன்.' 'இங்கே வா' 'மெல்லச் செல்' இச் சொற்களில்தான் எத்தனை இனிமை! இந்தச் சிந்தனையோடு செல்லுகிருள் விரிசிகை. அவள் பின்னழகு வெள்ளம் பருகுகிருன் உதயணன்.

பூங்கொடி ஒன்று நடைபெற்று வருவதுபோல மலரும் தளிரும் ஏந்தி அதோ வருகிருள் வாசவதத்தை. அவள் வந்த வழியே விரிசிகையைக் காலம் இழுத்துச் சென்றது.

விரிசிகையின் பொன்ெனளி அவள் கண்ணிற் பட்டது. தன்னையும் வெல்லும் இயற்கை அழகு, அவளிடமிருப்பதை அறிந்தாள். அதை மிகைப்படுத்தியது மலர் சூட்டிய செயற்கை அழகு. சிந்தித்தாள். இங்ஙனம் புனைவதிலும், ஒப்பனை செய்வதிலும் வல்லவர் உதயணரே என்று நினைத்தபோது அவள் நெஞ்சு புண்ணுயிற்று. நெஞ்சில் வந்து பின்னும் இந்த நிகழ்ச்சி வருத்த கையிலிருந்த மலரையும், தளிரையும் வீசி எறிந்தாள். தளிரும் மலரும் உதிர்ந்த கோடைகாலத்து வெறுங் கொடிபோலானுள் வாசவதத்தை.

*　　*　　*　　*

ஆமாம்....அந்தக் கவிஞனுக்கு என்னபரிசு கொடுத்தீர்கள்....

ஏன்? அப்படி அதை நினைவில் வைத்துக் கேட்கிருய். நீங்கள் சொல்லுங்கள்....பிறகு காரணத்தைக் கூறுகிறேன்.

பொன்னுடையும் நூறுபொன்னும் கொடுக்கப்பட்டது. காரணத்தைச் சொல்.

உங்களை 'பெருமகன் மார்பில் பிரியாது உறையுமோர் திருமகள் உளள்' என்றபோது எனக்கு வருத்தமாக வும் அத்தனை பெரிய சபையில் கேட்க நாணமாகவு மிருந்தது.

ஓ! அதையா சொல்லுகிறாய். காத்தற் கடவுளாகிய திருமாலை அரசர்களாகக் கூறுவது வெறுங்கவி மரபு என்று நகையாட்வேண்டிய திருக்க நினைத்து நீ ஏன் வருந்துகிறாய். என்று தேற்றத் தெளிந்தாள் அன்று வாசவதத்தை. உதயணண் மார்பில் திருமகள் இருக் கிறாள் என்பதைக் கேட்கப் பொறாத உள்ளம் இந் நிகழ்ச்சி கண்டு எப்படிப் பொறுக்கும்.

காஞ்சனை மூலமாய் இதை உதயணன் அறிந்தான். ஓடோடிவந்தான். இனியன கூறி அணிகளைத் திருத்தி னான். 'நீ இங்ஙனம் சினந்தால் அதுவே என் உயி ருக்கு இறுதியாகும்' என்று அச்சுறுத்தினான். எல் லாம் வீணாயின. இந்தச் சமயத்தில் தம்முள் போர் தொடுத்த குரங்குகளில் ஒன்று அஞ்சி ஓடி அவர்கள் முன் குதித்தது. இன்னது செய்வதென்றறியாத வாசவதத்தை ஓடி உதயணன் மலர்க்கரத்தைப் பற்றினாள்.

ஊடல் கூடலாயிற்று!

—வித்துவான் விசு. திருநாவுக்கரசு

# இலக்கிய மரபு

வாழ்வுக்கு வழிகாட்டியாக—வாழ்வுப் பாதையின் கட்டுக்கோப்பு உலேந்துவிடா திருப்பதற்காக நாம் சில கற்பனைகளை—நினைப்புகளை—ஏன்?—பிரமைகளையுங் கூட ஒப்புக்கொண்டு, அதன்பின் ஒண்டி நடந்து செல்லுகிருேம். இம்மாதிரி 'மனுஷ சாரைகள்' ஊர்ந்து ஊர்ந்து தேய்ந்துபோன பாதைகள்தான் வழக்காறு—சம்பிரதாயம் சட்டம் என நாம் குறிப்பிடுவது. வரம்பு-பரப்பு இரண்டுந் தெரிந்துகொண்டு காட்டுக்குள் காலடி வைத்தவுடன் 'தடந்' தெரியாமல் திகைப்பவர்களாகிய நாம், பின்னுல் என்ன வரும்—என்னவாகும் என்பதற்கு வெறும் கற்பனை ஒன்றையே ஊன்றுகோலாக வைத்திருப்பதால் நியதி—சம்பிரதாயம் என்ற இவற்றில் சற்று பிசகு ஏற்படுமோ என்ற பயம் அடிக்கடி தோன்றுவது இயல்பு. வரம்புக்கு உட்படுத்தப்பட்ட சிந்தனைகளினுல்தான் இலக்கிய மரபுகள், சமூகத்தின் நிலேயான தன்மைக்கு அனுசரணையாக இருந்து வருகின்றன; இவ்வாறு இருந்து நம்மை 'மகிழ்விக்க' வேண்டியதாயிற்று.

சமூகம் அடிமாண்டுபோய், போன இடம் புல் முளைத்து, தடந்தெரியாதும் மறைந்து விடாதிருக்க ஏற்றிவைக்கப்பட்ட சிந்தனை விளக்குகளில் ஒன்று இலக்கியம் என்பதற்காக ஒரு வார்த்தைக்கு இடங் கொடுத்து அதற்கு வணங்கி வழிபட்டு வருகிருேம். அதற்கு நாம் இட்ட பெயர் மரபு என்பது. இலக்கியத்தின் மரபு என்ருல் அதில் இன்னின்ன விஷயங்

களைத்தான் சொல்லவேண்டும் என ஒரு கோட்பாடு வகுப்பதாகும். ஆதி சமூகங்கள்யாவும் அதிகார மோக சமுதாயங்கள். அவை மனிதனுடைய ஆதி பருவத்தில் அவன் மனதைப் பக்குவப் படுத்தின. இன்று அதிகாரத்தை அடிப்படையாகக்கொண்ட சமுதாயப் பரிசிலனைகூட கல்விக்கு நிர்ப்பந்தத்தைச் சாதனமாக வைத்திருக்கிறது. அதேமாதிரிதான் இலக்கியமும் மனிதநலத்திற்குத் 'தொண்டு' புரியவேண்டும் என்ற நியதி மரபின் அடியாக, இலக்கியத்தில் சில காரியங்களைத்தான் சொல்லலாம்—சொல்லவேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆதி காலத்து இலக்கிய 'செய்வினைஞர்கள்' "காலத்தேவதையின் முன்பு நாம் நமது எண்ணங்களை—வேட்கைகளைப் பாதகாணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம். ஆகையால் அவை மாசு மறுவற்றிருக்கவேண்டும்" என நினைத்தார்கள். அதாவது சமூகத்தின் உயிர்த் தெம்புக்கு பலக்குறைவு தரக்கூடியது எனச் சிறு ஐயத்திற்கு இடங் கொடுக்கக்கூடிய கருத்தாக இருந்தாலும் அவை ஒதுக்கப்படவேண்டியது என கருதப்பட்டது.

அக்காலத்தில் சமூகத்தின் தேவைகள் சொற்பம்; வசதிகள் அதைவிடச் சொற்பம். அதனால் மனிதனுடைய வேட்கைகளானது அவனிட்ட வரம்புகளுக்குள்ளாகவே கிடக்கக்கூடிய தன்மை வாய்ந்திருந்தது. அந்த எளிதான அமைப்பு, எளிதில் குலைந்துவிடாமல் கட்டப்பட்ட வேலி மதிலாகமாறி, இன்று மலையாகச் சூழ்ந்து மனித சிந்தனையை அமுக்க ஆரம்பித்துவிட்டது.

தெரியாத அபாயத்தைவிட தெரிந்துள்ள தொந்தரவு சகித்துக்கொள்ளக்கூடியது என நினைப்பது மனித இயல்பு.

ஆதியில் மனிதன் விளையாட்டுப் பொம்மையாக வைத்து விளையாடிவந்த அறிவு என்ற ஒன்று இன்று ஒரு கோர சத்தியாக உருவெடுத்து அவனையே ஆட்படுத்தி அவனது பற்றுக்கோல் இற்று ஒடிந்து போகும்படி செய்துவந்தது. அந்தப் பற்றுக்கோலை அனுசரித்து ஒழுகிவந்த இலக்கிய மரபுகள் அதனுடன் குடியோடிப் போயிற்று. கடவுளர்கள் எப்படி மண் தொடர்பு அற்று மனிதத் தோழமையை இழந்தார்களோ, அதே மாதிரி இலக்கிய மரபும் ஏகாங்கியாயிற்று. இன்று வாழ்வு சொல்லுகிற கோரக்கதியிலே பற்றுக்கோலை ஒட்டிச் செல்வதற்கு நேரமில்லை. ஆனால், வாழ்வின் வரம்பும் அடிப்பீடமும் நமக்கு உறுதிபெற்று விட்டதால் சொல்வது வலுவுள்ளதாக மட்டும் இருந்தாற்போதும்; கோர உண்மையாக இருந்தாலும் அவை மண் தொடர்பு பூண்டு—மனிதத் தோழமையைப் பூண்டு அங்கேயும் உலாவுகின்றன. ஜீவித்திருக்கின்றன. நமக்கு நாமறிந்த பொருள்கள் காட்டுகின்றன. ஆகையாற்றான், இன்று இலக்கிய மரபு மனித சகவாசத்தை அவனுடைய பலவீனங்களால் விரும்பித்தோழமை கொள்ளுகிறது. அந்தரத்து வானதேவர்களைத் தேடித் திரிந்து கால் சலித்த இலக்கியம் இன்று வாழ்வின் பாதையில் மனிதனுடன் சமமாக—அவனோடணைகப் பொருந்திச் செல்கிறது.

—புதுமைப்பித்தன்

நாட்டிலே மிகுதியாக நாம் வியாபாரத்தைக் காண லாம். சிறப்பாகப் பட்டணங்களிலே பெண்கள்தான் அதிகமாகச் செய்வார்கள்—ஏன்?— செய்கிறார்கள். கண்டாரை மயக்குந்தன்மை அவர்களுக்கே உரியது. விலைபோகாத சரக்கையுங்கூட சிரித்துப்பேசி விலை யாக்கிவிடுவார்கள். அது அவர்களின் இயல்பு அல்ல, சமுதாயம் அவர்களை வைத்திருக்கும் இயல்பு அது.

தெருத் தெருவாக—வீடு வீடாகத் 'தயிரோ தயிர்'— 'பூவோ பூ' என்று கூய் விற்கும் மாதர்களும் பட்ட ணங்களிலே உண்டு. இவர்கள் பெரும்பாலும் ஏழ் மைக் குடிகளைச் சார்ந்தவர்களாகத்தா னிருப்பார்கள். இதில் சிறப்பானவள் பூ விற்பனை செய்பவள்; பூக் காரி. இவர்களிடத்து இடறி ஆண்கள் அகப்பட்டுக் கொண்டால் மீள்வது அறிது.

'இந்தா! இது என்ன விலை?'
'முழம் காலணுவுங்க!'
'அரையணுவுக்கு மூன்று முழம் தரமுடியுமா?'
'இல்லீங்க'

'அப்போ காலணுவுக்குக் கொடு' என்ற இந்த மாதிரி யான உரையாடல்களைத்தான் நாம் காணலாம். ஆனல், இதை ஒரு கவிஞனே, ஓவியனே கண்டால் அது புதுமையாக—அழகாக—உருவாகும். ஓவியன் அப்படியே வரைந்துவிடுவான். கவிஞன் புதுமையாக

—நயமாக—இலக்கியப் பண்போடு—கவிச் சுவையோடு உருவாக்கி விடுவான். நம் கண் வேறு. கவிஞர் கண் வேறு. இதையாரும் மறுக்க முடியாது.

பூ வாங்க வந்தான் ஒரு ஆடவன். பூவைப் பார்வை யிட்டான். அவ்வளவுதான்! — பூவை இழுத்துவிட் டாள் தன் பக்கல். காதல் மலர்ந்தது. அந்த நிலையிலே அவர்களிடையே நிகழும் உரையாடல்களுங்கூட காதற் சுவை பயக்கின்றன. பயந்துதானே தீரும்.

“அம்மா! இம் முல்லை மாலை எனக்கு வேண்டும். தருகிறாயா?”

அதற்கு விடையாக அவள் அதரங்கள் நெளித்துக் கீற்றோடி விளையாடின.

‘இத் தாமரை மலர் என்னவிலை?’
‘என் முகத் தாமரையையே........’
‘முழுதும் வேண்டாம் ஒரு இதழ்’
‘தேனொழுகும் என் இதழையே........’
‘அன்பே! இப் பூவின் பெயர்?’
‘பூவை’

‘ஓ! பூவையா! பூவையின் மணம் முழுதும் தேவை?’
‘இந்தாருங்கள்’ என்று கட்டித் தழுவி நின்றாள்.

இது பூக்காரி — பூவாங்குபவர் ஆகிய இருவர்க ளிடையே நிகழ்ந்த உரையாடல். பூ வாங்க வந்து பூவையின் மையலிலே விழுந்து பூவையை அடைந்து விடுகின்றான் தலைவன். ஈருடல்—ஒருயிர் ஆக ஆகிவிட் டன. இதையே நம் கவிஞர் பாரதிதாசன் அழகாக-

நயம்படக் கவிதையாக உருவாக்கி இருக்கிறார். பாட்டைப் பாருங்கள் :

"சேர்த்துக் கட்டிய முல்லைவேண்டும் என்றேன்—நல்ல
சேயிழை அவள் சிரிப்பு முல்லை தந்தாள்
பார்த்துப் பறித்த தாமரைப்பூத்
தீர்த்து விலைக்குக் கொடடி என்றேன்
பூத்தமுகத் தாமரையால்
புதுமை காட்டி மயக்கி நின்றாள்—சேர்த்து......
தேவையடி தாமரை இதழ்என்றேன்—அவள்
தேனொழுகும் வாயிதழ் மலர்கின்றாள்—ஒரு
பூவைக் காட்டிப் பேர்சொல் என்றேன்
பூவை 'என்பேர் பூவை' என்றாள்
ஆவல் அற்றவன் போல் நடந்தேன்
அவள் விழிதனில் அலரி கண்டேன்—சேர்த்து.........
காவல் மீறிக் கடைக்கு வந்து விழுந்து—பலர்
கண்பட்டதால் வாடிய மருக்கொழுந்து
மேவாதடி என்று சொன்னேன்
வேங்கையில் ஈ மொய்க்காதென்றாள்
தேவைக்கு மணம் வேண்டும் என்றேன்
திருமணம் என்று தழுவி நின்றாள்—சேர்த்து.....

எதையும் காணும்போது நாம் ஒரு கருத்துப்படக் காண்போம். கவிஞர்கள் அப்படியே கண்டதை உளத்தே அமைத்து பிறகு அமைதியுற்ற நேரத்திலே அதைப் புதுமையொடு வெளியாக்குவார்கள். இப் பாடலும் கருத்தொடு-பண்பாடொடு-சுவையொடு-பல மலர்களின் பெயர்களைக் கொண்ட சிலேடை நயத்தொடு அமைந்திருக்கிறது.

—நா. அறிவழகன்

நாடகத் தமிழை எடுத்துக் கொள்வோம். இதைப் பற்றிக் கூறியிருப்பவைகளைக் கூர்ந்து பார்த்தால் வியப்பாயிருக்கிறது. அவ்வளவு நுணுக்கங்களும் பாகுபாடுகளும் நாம் காண்கிறோம். நாடக முறையில் என்னென்ன செய்ய முடியுமோ—கூடுமோ அவை களனைத்தையும் கூறியிருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். ஒன்றையும் ஆசிரியர்களின் கற்பனை சக்திக்கோ—சொந்த முயற்சிக்கோ விடவில்லை. கதைப்போக்கு—கதை முடிவு—நடிகர்கள்—நடை—படிப் பிணை—மெய்ப்பாடுகள் முற்றிலும் வகுக்கப் பட்டி ருந்தன. ஆசிரியன் அவைகளிலிருந்து தனக்கு வேண் யவற்றை எடுத்துப் பொறுக்கி சம்பிரதாயப்படி எழுத வேண்டியதுதான் பாக்கி. மிகவும் வியக்கத் தக்க முறையில் அவன் வேலை எளிதாக்கப்பட்டிருந் தது. நாடகத் துறையில் எவ்வித புதுமுயற்சி செய்தாலும் அதற்கெல்லாம் இலக்கணம் நம் பழைய நாடகவியல் நூற்களில் இருக்கிறது. மேலை நாட்டு இலக்கியங்களில் தற்காலத்தில் ஒற்றை யங்க நாடக ங்களென்று மிகவும் வெளி மதிப்புப் பெற்றிருக் கின்றன. தற்கால அவசர நாகரிகத்திற் கேற்ற—அவசரமாக மகிழ்விக்க ஏற்ற நாடக முறை. அதற்கு ஏற்றதாகப் பெயரும் "அங்கம்" என்று கொடுத்தி ருந்தார்கள். அதைப்பற்றிய முழு விபரங்களையும் கூறும் பொழுது,

"அவலச் சுவைத்தா யங்கமொன் றுடைத்தாய்க்
கவலைகொள் மகளிர் கசிந்துள மழுங்க
வண்மினர் வாய்விடுத் தாற்றுமாண் பிற்றாய்
வாதம் விளைத்து வாய்ப்போர் காட்டி
மக்கள் பாத்திரமா வயங்குறு வதுவே
யங்கமென்ன வறிதல் வேண்டும்"

இப்பொழுது அவர்களின் நாடகத்தைப் பற்றிய சில முக்கியமான இலக்கணங்களைக் கவனிப்போம். நாடகமென்ருல் முதலில் கதை நினைவிற்கு வருகிறது, கதையின்றி நாடகமேது? ஆங்கிலத்தில் இதற்குத் தான் Plot என்று சொல்லுவார்கள். இந்த நாடகக் கதையை மூன்று பிரிவாகப் பிரித்திருந்தார்கள். பொய்யுரை-மெய்யுரை-புனைந்துரை. பொய்யுரை என்ருல் ஆசிரியன் தானுகவே புதிதாக ஒரு கதை உண்டாக்கி (அது உலகத்தில் முன் ஒருவராலும் எழுதியிருக்கக் கூடாது-நிகழ்ந்திருக்கவுங் கூடாது) அதை உண்மைபோற் காண்பிப்பது. இவ்வளவு எளிதாகக் கூறிவிட்டாலும் எவ்வளவு கடினம் இப்படிச் செய்வது. இதைத்தான் Original Plot என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். உலகம் புகழும் ஆங்கில நாடகாசிரியராகிய ஷேகஸ்பியர் (Shakespeare) இந்த வம்புக்குப் போகவே இல்லை. சொந்தக்கதையாய் ஒன்று கூடச் செய்யவே இல்லை! மெய்யுரை என்பது உலகத்தில். உண்மையாய் நடந்திருப்பதை எல்லோரும் அறிந்ததைத் தெளிவாய் எடுத்துரைப்பது. அதாவது வரலாற்றுத் தொடர்பான நிகழ்ச்சியைத் தேர்ந்தெடுத்து நாடகப் படுத்துவது. இதை Historical Plot என்று கூறுவார்கள். புனைந்துரை என்ருல் உலகத்தில் நடந்ததையோ—அல்லது—நடந்ததாகக் கேட்டதையோ ஆதாரமாக வைத்துக்கொண்டு, அதனெடு சிறிது ஆசிரியன் தன் சொந்தச் சரக்கையும் சேர்த்து எழுதுவது. அப்படி ஏதாவது இருந்தால்,

"உள்ளோன் றலைவனு வுள்ள துரைத்தலு
மில்லோன் றலைவனு வில்ல திசைத்தலு
முள்ளோன் தலைவனு வில்ல துரைத்தலு
மில்லோன் தலைவனு யுள்ள தியம்பலும்
பெருமைசால் யோனிப் பெயரினவாகும்."

இதனுள் தற்கால 'Realistic Drama' 'Fanlasy' எல்லாம் அடங்கியிருக்கின்றன என்பதைக் காண லாம்.

*    *    *    *

நாடகத்திற்குள் நாடகம் 'Play Within Play' என்று ஆங்கிலத்திலே சொல்லுவார்களே, Hamlet-இல் முக்கிய பகுதி; அதுவும் முற்காலத்திலே யோசிக்கப்பட்டிருக்கிறது; பெயர் உள் நாடகம் என்றூர்கள். உள் நாடகம் பத்து அங்கம் கொண்ட பெரிய நாடகங்களுக்கு 'மா நாடகம்' என்றூர்கள்; மார்லோவின் 'டாம்பூர்லேன்' என்ற நாடகம் பத்து அங்கம் கொண்ட ஒரு மா நாடகமாகும். மூன்று நாடகம் ஒன்றன்பின் ஒன்ருய் ஒரு கதையை விளக்கினுல் அதற்குப் பெயர் 'முந் நாடகம்' என்றூர்கள். ஆங்கிலத்தில் 'Triloty' என்று சொல்லுவார்கள். இதற்கு எடுத்துக்காட்டு ஷேக்ஸ்பியர் எழுதிய இரண்டாம் ஹென்றி பற்றிய நாடகங்கள். இவைகளுக்கு இலக்கணம் நம் நாட்டிலேயே பழைய காலத்தில் வகுத்திருந்தார்கள். நாடக முடிவு இருவகை. இன்பியல் (Cemedy) துன்பியல் (Tragedy). சாதாரணமாய் துன்பியல் நாடகங்கள் எழுதப்படவில்லையென்ருலும் அவைகளையும் யோசித்து வைத்திருந்தார்களென்று தெரிகிறதல்லவா? சிலப்பதிகாரத்தின் முடிவு இந்த இறுதியை யன்ருே நிரூபிக்கின்றது. மேலும் விருத்திகள் நான்கெனவும், கூற்றுவகைகளும் நான்கென்றும், கூத்து எழுவகையென்றும், ஒன்றையும் பாக்கிவிடாமல் சொல்லியிருந்தார்கள்.

*    *    *    *

திரைப்பட (சினிமா)ப் போட்டியால் இப்பொழுது வரவர நாடகங்கள் எழுதப்படுவதோ—நடிக்கப் படு

வதோ அரிதாய் விட்டது. இந்நிலையில் வானொலி (ரேடியோ) வந்தது நாடகத்திற்கு மிகவும் உதவியா யிருக்கிறது. பெரிய நாடகங்களும், சிறிய நாடகங் களும் நல்ல முறைகளில் எழுதப்பட்டு நன்றாக நடிக் கப்படுகின்றன. மக்களும் இவைகளை நுகர்ந்து பாராட்டுகிறார்கள். எழுத்தாளர்களும் புதுப்புதுக் கற்பனைகளை உண்டாக்கிக் கொடுக்கிறார்கள். ஆகவே, நாடகத்திற்கு ஓர் எதிர்பாராத விதத்தில் உதவி கிடைத்திருக்கிறது. இந்த உதவியை நல்வழிகளில் பயன்படுத்தினால் நாடகக் கலையும் நன்றாகச் சிறந் தோங்கும் என்பதில் ஐயமில்லை.

நாடகம் நுகர்வோர் தம்முள் ஆங்காங்கே அவைகளை அமைத்துக் கொண்டு நல்ல இலக்கியச் சுவையுள்ள நாடகங்களைத் தயாரித்து நடித்துக் காட்டுதலும் அவசியம். இயற்றப்படும் நாடகங்கள் தற்கால சமூகத்திற்கும் மக்கள் மனப்பான்மைக்கும் தகுந்த வாறு, நடிகர்கள்—உரையாடல்—கதை முதலியவை களை அமைத்து எழுதப்படவேண்டும். வேறு இலக் கியங்களிலிருந்து எண்ணங்களை எடுத்தால் அவைகளை நம்முடைய சமுதாயத்திற்கும், வழக்கங்களுக்கும் தகுந்தமாதிரியாக மாற்றி அமைத்து எழுதவேண்டும்.

மக்களின் விருப்பு — வெறுப்புத்தான் இப்பொழுது கவனிக்கப்படவேண்டும். மீண்டும் நம் நாடகமானது தனது பழைய நிலையை-புது முறைகளை அடையுமாறு முயற்சிப்போமாக!

—சி. ஆர். மயிலேறு

Printed at Bharathmata Press, 39, Anderson St., Madras.
Q. H. Ms. 174. 20-3-46—2000 Cs.
For Kamala Prachuralayam, Madras.—P. I. C. Q. No. 197

# K. R. இராமசாமி

# கிருஷ்ணன் நாடக

X Ba 91

•

தஞ்சாவூர் டவுன் ஹாலில்
நாடகம் நடைபெறுகிறது

•

உடுமலை நாராயணக்கவி, உபாத்தியாயர் பொன்னுச்சாமி பிள்ளை, ஓவியர் மாதவன், ஆசிரியர் முத்துக்கிருஷ்ணன், நடிக மணிகளான டி. வி. நாராயணசாமி, கே. டி. சந்தானம் சு ,தரமூர்த்தி ஆகியவர்களின் கூட்டுறவு கொண்டது

**பி. வி. எத்திராஜ்**
நிர்வாகி

Cover Printed at The Mercantile Press, 2/45, Muthi[illegible] Chetty St., G. T., Madras. Ph. No. 264-March '46-2000 Cs.